தெரு, முக்கூடல், தென்காசி. (2) ர.கிரண், 23, பாலகன் தெரு, முக்கூடல், தென்காசி. (3) க.மணிதரன், 151–309, மேலப்பெரிய வீதி, முக்கூடல், தென்காசி. (4) சி.பார்த்திபன், 28/58, அண்ணா நகர், முக்கூடல், தென்காசி. (5) ப.செண்பக செல்வன், 23, அம்பேத்கர் காலனி, முக்கூடல், தென்காசி.

### புதூர் பேரூர்

**அமைப்பாளர் :** அ.மைதீன், 135, தெற்குத் தெரு, இரவியதர்மபுரம், புதூர், செங்கோட்டை, தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கா.மகேந்திரன், 9–251, காளியம்மன் கோயில் தெரு, கீழப்புதூர், தென்காசி. (2) மு.சுப்பிரமணியன், 13/76, பிள்ளையார் கோயில் தெரு, தவணைப்புதூர், தென்காசி. (3) சு.முத்துராஜ், 2/2–168, தெற்குத் தெரு, லாலா குடியிருப்பு, புதூர், தென்காசி. (4) ஐ.கதிர், 7–ஜி, தெற்குத் தெரு, மூன்று வாய்க்கால், செங்கோட்டை, தென்காசி. (5) ஆ.சூரிய நாராயணன், 8/1/71, நாராயணன்கோயில் தெரு, கேசவபுரம், புதூர் புளியரை, தென்காசி.

### ஆழ்வார்குறிச்சி பேரூர்

**அமைப்பாளர் :** சை.கார்த்திக், 23, சௌந்தர பாண்டிய விநாயகர் கோயில் தெரு, ஆழ்வார்குறிச்சி, தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சு.அன்பழன், 59/11, வடக்குத் தெரு, மேலவூர், செட்டிக்குளம், ஆழ்வார்குறிச்சி, தென்காசி. (2) ச.சரவணராஜா, 3, கல்யாணி தெரு, ஆழ்வார்குறிச்சி, தென்காசி. (3) மா.சுப்பிரமணியன், 15, நீலகண்ட விநாயகர் கோயில் தெரு, ஆழ்வார்குறிச்சி, தென்காசி. (4) ச.கந்தாமி, 116, திருநீலகண்டன் தெரு, அழ்வார்குறிச்சி, தென்காசி.

### வடகரை பேரூர்

**அமைப்பாளர் :** அ.காசிராஜன், 64/62, உண்மை விநாயகர் கோயில் தெரு, வாவாநகரம், செங்கோட்டை, தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஹா.முகமது அலி, 9, கணக்கருத்தான் தெரு, வடகரை, தென்காசி. (2) மு.முகமது அலி, 14/32, மதரஸா தெரு, வடகரை, செங்கோட்டை, தென்காசி. (3) அ.மைதீன் அப்துல் காதர், 3, ஷெரீஃப் நகர், 6–வது தெரு, வடகரை, தென்காசி. (4) மு.மாரியப்பன், 55, பிள்ளையார் கோயில் தெரு, அண்ணா நகர், தென்காசி.

### பண்பொழி பேரூர்

**அமைப்பாளர் :** மு.நாகூர் மீரான், 66/11, திருமலைக் கோயில் சாலை, பண்பொழி, தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.ஜயப்பன், 9/1, மேனேஜர் பிள்ளை தெரு, பண்பொழி, தென்காசி. (2) ரா.வீரமணிகண்டன், 22/2, கரிசல் வடகரை, யூனியன் சாலை, கரிசல்குடியிருப்பு, பண்பொழி, தென்காசி. (3) மு.வனிஷ், 48, வாணிய செட்டியார் தெரு, பண்பொழி, தென்காசி. (4) த.ராமர், 108, திருமலைக் கோயில் சாலை, வண்டாடும் பொட்டல், பண்பொழி, தென்காசி. (5) மை.காஜா மைதீன், 14–1–45, பாறையடி தெரு, பண்பொழி, தென்காசி.

### ஆலங்குளம் பேரூர்

**அமைப்பாளர் :** பி.யாபேஸ், 199, ஆர்.சி.தெரு, ஆலங்குளம், தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இரா.இசக்கிமுத்து, 1–6 குருவன் கோட்டை, ஆலங்குளம், தென்காசி. (2) சி.முருகன், 4/38, சி.எஸ்.ஐ. சர்ச் தெரு, ஆலங்குளம், தென்காசி. (3) ரா.சங்கர், 2/35, நெட்டூர் சாலை, ஆலங்குளம், தென்காசி. (4) பா.கமலன், 11/60, காமராஜர் நகர் ஆலங்குளம், தென்காசி. (5) வை.சிவமணிகண்டன், 129/9, ராஜீவ் காந்தி நகர், ஆலங்குளம், தென்காசி.

### கீழப்பாவூர் பேரூர்

**அமைப்பாளர் :** மு.ராஜேஷ், 184–பி–1, செல்லைய நாடார் தெற்குத் தெரு, கீழப்பாவூர், தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.பாரதிராஜா, 54/8, ஆலங்குளம் சாலை, கீழப்பாவூர், தென்காசி. (2) சு.சுடர்பாண்டியன், 11/97, பொன்ன நாடார் வடக்குத் தெரு, கீழப்பாவூர், தென்காசி. (3) சு.கண்ணன், 31/6, சாமிகோயில் தெரு, கீழப்பாவூர், தென்காசி. (4) சு.லட்சுமிநாராயணன், 42/44–ஏ, செங்குந்த பிள்ளையர் கோயில் தெரு, கீழப்பாவூர், தென்காசி.

### ஆயக்குடி பேரூர்

**அமைப்பாளர் :** க.மாடசாமி, 131/1, எம்.ஜி.ஆர் காலனி, ஆயக்குடி, தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.கல்யாணசுந்தரம், 2, மண்டகபடி தெரு, ஆயக்குடி, தென்காசி. (2) ப.ஜயப்பன், 17/1 ,பேச்சியம்மன் கோயில் தெரு, ஆயக்குடி, தென்காசி. (3) சு.சுடலை (எ) சுரேஷ், 4–4–63, மண்டகபடி தெரு, ஆயக்குடி, தென்காசி. (4) ந.சாகுல் ஹமீது, 221, பள்ளிவாசல் தெரு, கம்பளி, தென்காசி. (5) ச.முத்துக்குமார், 129/1, உச்சி பிள்ளையார் கோயில் தெரு, ஆயக்குடி, தென்காசி.

### சாம்பவர் வடகரை பேரூர்

**அமைப்பாளர் :** ச.மணிகண்டன், 12/4/41, அரசப்ப மூப்பனார் தெரு, சாம்பவர் வடகரை, தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.சுந்தர்ராஜ், 13/6–1, கிழக்குத் தெரு, சாம்பவர் வடகரை, தென்காசி. (2) ஐ.ரபீக் ராஜா, 70, பள்ளிவாசல் தெரு, சாம்பவர் வடகரை, தென்காசி. (3) ச.அஜீத் பாபா, இந்திரா நகர், சாம்பவர் வடகரை, தென்காசி. (4) மு.வெள்ளத்துரை, 1/2–10, வடகாசி அம்மன் கோயில் தெரு, சாம்பவர் வடகரை, தென்காசி. (5) ஆ.மாணிக்கராஜ், 11/5/11/8, கிருஷ்ணா தெரு, சாம்பவர் வடகரை, தென்காசி.

### அச்சன்புதூர் பேரூர்

**அமைப்பாளர் :** ரா.தளவாய் முதலி, 4/6–31, குற்றால விநாயகர் கோயில் தெரு, தென்காசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஐ.மாரியப்பன், 2/2–39, பள்ளிவாசல் தெரு, அச்சன்புதூர், தென்காசி. (2) ச.சஞ்சய்குமார், 1/1, 25/1, அம்மன் கோயில் தெரு அச்சன்புதூர், தென்காசி. (3) மீ.முனசர் முகம்மது ரஜப், 7/3–19, முஸ்லிம் தெரு, அச்சன்புதூர், தென்காசி.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 12–04–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

# டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள்! ‘சமத்துவம் காண்போம்’ - போட்டிகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஏப்.13-

இந்திய அரசியல் சாசனச் சிற்பி ! சீரிய சமூகச் சீர்திருத்தச் செம்மல் !அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஏப்ரல் 14ஆம் நாளை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் 10.4.2025 முதல் 30.4.2025 வரை “சமத்துவம் காண்போம்” போட்டிகள் நடைபெறுகின்றன. இதில் பொதுமக்களும் மாணவர்களும் பங்கேற்கலாம் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.4.2022 அன்று முதலமைச்சர் அவர்கள், “வடக்கே உதித்த சமத்துவச் சூரியன், பலர் வாழ்வில் கிழக்காய் இருந்த பகலவன்” நமது அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14ஆம் நாளை, “சமத்துவ நாளாக” கொண்டாடுவது என்று தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது எனச் சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் அறிவித்தார்கள். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் ஆண்டுதோறும் சமத்துவ நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் வாயிலாக “சமத்துவம் காண்போம்” என்ற தலைப்பில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கு பெறும் வகையில் சமூக ஊடகங்களான எக்ஸ் தளம் (X), படவரி (Instagram), முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (YouTube) வாயிலாக 10.4.2025 முதல் 30.4.2025 வரை பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

“சமத்துவம் காண்போம்” என்கிற முழக்கம் சமூகநீதி (Social Justice) என்ற கருத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. தனிமனிதருக்கும், சமூகத்திற்கும் இடையேயுள்ள சமமான, நியாயமான உறவைக் குறிக்கிறது. தனிமனிதரின் சமூகச் செயல்பாடுகளுக்குத் தேவையானவற்றை நிறைவுசெய்து, பாகுபாடற்ற நீதியையும், நியாயத்தையும் நிலைநிறுத்துவதற்கான சூழலை உருவாக்குவதற்காகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதன்மூலம் மக்கள் அனைவருக்கும் சமமான நீதி, வேலை வாய்ப்புகள், பாதுகாப்பான வாழ்க்கை ஆகியவை அமைவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் இப்போட்டிகளில் வெற்றிபெறும் வெற்றியாளர்களை நேரில் சந்தித்து, அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்கள். எனவே, பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் அதிக அளவில் இப்போட்டிகளில் பங்கேற்குமாறும், தங்களது படைப்புகளை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

போட்டிகளும், அதன் விதிமுறைகளும் பின்வருமாறு :




**போட்டி 1 : ஒரு கதை சொல்லட்டுமா?** (Story Telling)

தலைப்பு: சமூகநீதி அல்லது கல்வியின் முக்கியத்துவம் (அல்லது) உங்களுக்குப் பிடித்த இந்திய அரசியலமைப்புச் சட்டம் எது? என்பது

குறித்துக் கதைகளைப் பதிவிட வேண்டும்.

வடிவங்கள் : ரீல்ஸ் (1 நிமிடம்) அல்லது ஒரு பக்கக் கதை.

**போட்டி 2: ஓவியம் வரைதல் போட்டி**(Drawing)

தலைப்பு : சமத்துவம் காண்போம்

அளவு : 1 MB,

**போட்டி 3: வினாடி வினாப் போட்டி**(Quiz)

தலைப்பு: அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) (அல்லது) இந்திய அரசியலமைப்பு அடிப்படைகள் (Indian Constitution Basics)

**போட்டி 4: மீம்ஸ் போட்டி**(Memes)

போட்டியாளர்கள் பெண் கல்வி, சமத்துவம் அடிப்படையில் மீம்ஸ்களை உருவாக்கி அனுப்ப வேண்டும்.

அளவு : 1 MB

**போட்டி 5: வலையொலி** (Podcast)

தலைப்பு: “நான் அண்ணல் அம்பேத்கராக இருந்தால்” நீங்கள் அண்ணல் அம்பேத்கராக மாறினால், தற்போதைய உலகில் எந்தெந்த மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள்? (அல்லது) அண்ணல் அம்பேத்கரின் கொள்கைகள் இன்றைய காலத்திற்கேற்ற அதன் பங்கு.

அளவு : 1 முதல் 3 நிமிடங்கள் வரை (2 MB)

படைப்பாளிகள் தங்களது படைப்பினை ஒலி வடிவில் (தமிழில்) பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**போட்டி 6: உரிமைகளுக்கான Rap பாடல்** (Rap Singing)

அனைவரும் சமம் என்ற தலைப்பில் ஃப்ரீ ஸ்டைல் Rap செய்து ஒலி வடிவில் அனுப்ப வேண்டும்.

அளவு : 1 முதல் 3 நிமிடங்கள் வரை (2 MB)

**போட்டி 7: செல்ஃபி மற்றும் ஹாஷ்டாக் போட்டி** (Selfie and Hashtag)

அண்ணல் அம்பேத்கர் சிலை அல்லது போஸ்டர்களுடன் செல்ஃபி

“இந்திய அரசியலமைப்பு” புத்தகத்துடன் செல்ஃபி

அரசியலமைப்பின்முன்னுரையுடன் செல்ஃபி

#RiseforEquality என்ற ஹாஷ்டாக்குடன் பதிவுகளை உங்கள் சமூக ஊடகக் கணக்குகளில் பதிவிட்டு, TNDIPR சமூக ஊடகக் கணக்கை TAG செய்ய வேண்டும்.

உங்கள் நண்பர்கள் மற்றும் பின் தொடர்பவர்களும் #RiseforEquality என்ற

ஹாஷ்டாக்குடன் இப்பதிவுகளைப் பகிர்ந்து கொள்ளலாம். (அளவு: 1MB)

**போட்டி 8: சமூக ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வு** (Whatsapp and Instagram Outreach)

பங்கேற்பாளர்கள் தங்கள் Whatsapp status மற்றும் Instagram Storyல் அண்ணல் அம்பேத்கரின் மேற்கோள்கள் (Quotes) அல்லது அரசியலமைப்பின் முன்னுரையைப் பதிவிட வேண்டும். அதைத் தங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரையும் பகிர்ந்து கொள்ளச் செய்யவேண்டும். அதிக எண்ணிக்கையிலான Status Screenshots பகிரப்பட்டதன் அடிப்படையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மேற்கண்ட இப்போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் tndiprmhsamathuvamkanbom @gmail.com என்ற மின்னஞ்சல் மற்றும் கீழ்க்கண்ட விரைவு துலங்கள் குறியீடு (QR code) வாயிலாகத் தங்கள் படைப்புகளை 30.04.2025க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

## நிவேதா எம்.முருகன் தலைமை! முத்து தேவேந்திரன் வரவேற்புரை!

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து.மகேந்திரன் இல்ல மணவிழா வரவேற்பு!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சிவ.வீ.மெய்யநாதன் – கோவி.செழியன் – சி.வெ.கணேசன் – டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு!

*மயிலாடுதுறை, ஏப்.13-*

*மயிலாடுதுறை மாவட்ட கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் மேலையூர் முத்து. மகேந்திரன் இல்ல திருமண வரவேற்பு விழா . வியாழக்கிழமை மயிலாடுதுறையில் நடைபெறுகிறது.*

*மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா பூம்புகார் மேலையூர் முத்து. மகேந்திரன் கவிதா இணையர்களின் மகள் ம.இந்துஜாவிக்கும், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா கடவாசல் பெருமாள்கோயில் தெரு எஸ். கல்யாணசுந்தரம் வானிலா இணையர்களின் மகன் க.திவாகர் இவர்களின் திருமணம் 18.4.2025 அன்று காலை மயிலாடுதுறை சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருமண வரவேற்பு விழா வரும் 17.4.2025 வியாழக்கிழமை மாலை 6 மணி அளவில் மயிலாடுதுறை சிக்னேச்சர் மஹாவில் நடைபெறுகிறது.திருமண வரவேற்பு விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். மேலையூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்து.தேவேந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்.*

*கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேலன், சீர்காழி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பஞ்சு.குமார் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர். மண மக்களை வாழ்த்தி வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நல துறை அமைச்சர் சிவ.வீமெய்யநாதன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சிவ.வெ. கணேசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மூவேந்தர் முன்னேற்ற கழக தலைவர் ஸ்ரீதர் வாண்டையார், மாநில மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணி இயக்குனர் ஜெய. ராஜமூர்த்தி, முன்னால் அமைச்சர் உ. மதிவாணன், பேசுகின்றனர்.திருமண விழாவில் மாவட்ட கழக செயலாளர்கள் தஞ்சை வடக்கு சு கல்யாணசுந்தரம், தஞ்சை மத்திய துரை. சந்திரசேகரன், திருவாரூர் பூண்டி கே.கலைவாணன், நாகை என் கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், கே.பி.சங்கர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம்,,தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மாநில செயலாளர் தினகரன், மற்றும் கோ. ராஜப்பா, கே.கிருஷ்ணமூர்த்தி, எம்.முத்து, ப. ஷாவலியுல்லாஹ், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், செ. ராமலிங்கம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், எஸ். ராஜ்குமார், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம் ஸ்ரீதர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், மாநில விவசாய அணி துணை தலைவர் எஸ்.கே. வேதரத்தினம், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஜெக. வீரபாண்டியன், கும்பகோணம் மாநகர செயலாளர் சுப. ப.தமிழழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஐ.என்.ரவி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், எம்.பன்னீர்செல்வம், நாகை அ. அசோகன், டி.மூர்த்தி, ஏசி.என். விஜயபாலன், திருவாரூர் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தலைமங்கலம் ஜி.பாலு, ஓய்வு பெற்ற காவல் துணை கண்காணிப்பாளர் ஜி. பி.பாண்டியன், அரசு வழக்கறிஞர் இராமசேயோன், ஆடுதுறை பேரூர் செயலாளர் கோசி. இளங்கோவன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோசி.மதி. திருமாவளவன், சீர்காழி எல் பாபு, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் எஸ் பாலாஜி மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என்.செந்தில், மயிலாடுதுறை மாவட்ட கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் கே.ஜி. சீனிவாசன், துணை செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகி கண்ணீர், பொருளாளர் மகா.அலெக்ஸாண்டர், திருவாரூர் மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ். கார்த்தி, திருவாரூர் மாவட்ட கழக பொருளாளர் மு.வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க. இராஜேந்திரன், இலமேகநாதன், கிள்ளை ரவிச்சந்திரன், க.மறைமலை, ஒன்றிய கழக செயலாளர் மங்கையம் சங்கர், ஏ. ஜி.ஜே.பிரபாகர், செல்ல சேது.. ரவிக்குமார், . திருமாவளவன், என்இளையபெருமாள், பி.எம்.அன்பழகன், மூவலூர் எம்.மூர்த்தி, எம்அப்துல் மாலிக், ஞான. இமயநாதன், அமிர்த. விஜயகுமார், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், ப.முருகமணி, வி.எஸ்.ஆர்.தேவதாஸ், ஆர்.டி.எஸ்.சரவணன், தாமஸ்ஆல்வா எடிசன், செல்வ.செங்குட்டுவன், மகா.குமார், கா.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், எஸ். ஜோதிராமன், கோ.கா. அண்ணாதுரை, ஆர்.உதயச்சந்திரன், மே. மனோகரன், ஆர்.பாலச்சந்திரன், எஸ்.எம்.செல்வராஜ், நகர கழக செயலாளர்கள் ம.சுப்பராயன், குண்டாமணி (எ) என்.செல்வராஜ், இரா. மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம். ஆர்.செந்தில்குமார், ஆர்.எஸ்.பாண்டிய,சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகரன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் வைதுரைராஜன், என். பழனிவேல், கே.செல்வமணி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் தியாக.விஜயேஸ்வரன், உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர் முடிவில் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பொன்ராஜா நன்றி கூறுகிறார்.*



கழகத்தலைவரின் தத்துவ கரங்களை வலுப்படுத்த இளந்தலைவரின் வழியில் ”இல்லம் தோறும் மாணவர் அணி” முன்னெடுப்பில் கோவை தெற்கு மாவட்டம் சூலூர் சட்டமன்ற தொகுதி பாகம் எண் 40ல் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது நிகழ்வை கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி மற்றும் மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் துவங்கி வைத்தனர்.உடன் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் தம்பி வி.ஜி.கோகுல்,சூலூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மன்னவன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தம்பி பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.